இயக்குனரகம் (ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி) சென்னை - 600 006

மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள்,

பிறப்பிப்பவர், டாக்டர் எம். ஆர்த்தி இ.ஆ.ப.

ந.க.எண்: 98 /L1/CG - 16/ 2023, நாள்: 21.06.2023

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - அரசுப் பள்ளிகளில் பயிலும் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உயர்கல்வி சார்ந்து வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல் தொடர்பாக - ஒரு பள்ளிக்கு ஒரு உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர் தேர்ந்தெடுத்தல் - சார்பு.

பார்வை : 1. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை மானியக் கோரிக்கை.அறிவிப்பு எண் :6/2021-2022

2.அரசாணை நிலை எண்:5, பள்ளிக் கல்வித் துறை (ப.க.5(1)) துறை நாள்: 21.02.2022.

******

## செயல்முறைகள்

பார்வை-2ல் காணும் அரசாணையில், பள்ளிக் கல்வி துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்:6ல் "தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு.உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் ஆலோசனை மையம் உருவக்கப்படும். அதற்கென, தனியே கலைத்திட்டம், பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முறையாக கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர்வகுப்புகள் நடத்தப்படும் " எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"நான் முதல்வன் " திட்டம்**

இதன் அடிப்படையில் **நான் முதல்வன்** திட்டத்தின் கீழ் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பயிற்சி புத்தகம் தயாரிக்கப்பட்டு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் மாநில அளவிலான பயிற்சிகள் DIET விரிவுரையாளர்களுக்கும் மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, நடப்புக் கல்வியாண்டில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு முதன்மைக் கருத்தாளர்கள் வாயிலாக தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து, பள்ளிக்கு ஒரு பட்டதாரி ஆசிரியர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு உயர்கல்வி குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிக்காட்டுதல்கள் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் பொறுப்புகள் :**

1. ஒரு மாவட்டத்திற்கு இரண்டு பேர் வீதம் 38 மாவட்டத்திற்கு DIET விரிவுரையாளர்கள் தேர்ந்தெடுத்தல்.
2. அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து ஒரு ஆசிரியர் வீதம் ஆர்வமிக்க ஒரு ஆசிரியரை தேர்ந்தெடுத்து வருகின்ற 30.06.2023க்குள் EMIS இணைய தளத்தில் வாயிலாக சார்ந்த தலைமை ஆசிரியர்களால் பதிவேற்றம் செய்திட அறிவுறுத்திடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
3. 9 ஆம் வகுப்பு மொழிப் பாட ஆசிரியர்கள் அல்லது கணினி ஆசிரியர்களுக்கு முன்னுரிமை தரலாம்.

**தலைமையாசிரியர் பொறுப்புகள் :**

1. சார்ந்த பள்ளியின் தலைமை ஆசிரியர்கள், ஆர்வமிக்க ஒரு ஆசிரியரை தேர்ந்தெடுத்தல்.
2. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியரின் விவரங்களை 30.06.2023க்குள் EMIS இணைய தளத்தில் வாயிலாக பதிவேற்றம் செய்திட வேண்டும்.

**ஆசிரியர் பயிற்சி நிறுவன பேராசிரியர்கள் (DIET Principals )**

1. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுடன் இணைந்து ஒரு மாவட்டத்திற்கு இரண்டு பேர் வீதம் 38 மாவட்டத்திற்கு DIET விரிவுரையாளர்கள் தேர்ந்தெடுத்து அவர்களின் பெயர், தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி , அவர்களுடைய பணி போன்ற விவரங்களை cgtnss@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

படிவம்

| வ. எண் | மாவட்டம் | பள்ளியின் பெயர் | பெயர் | அலைபேசி எண் | மின்னஞ்சல் முகவரி | அவர்களுடைய பணி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

மாநில திட்ட இயக்குநருக்காக

பெறுநர்

1. முதன்மைக் கல்வி அலுவலர்,,அனைத்து மாவட்டங்கள்
2. பேராசிரியர்கள்,மாவட்ட கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம்,அனைத்து மாவட்டங்கள்

நகல்

1. மாவட்ட கல்வி அலுவலர், அனைத்து மாவட்டங்கள்
2. அனைத்து மாவட்ட ஒருங்கிணைபாளர்கள்
3. அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள் , அனைத்து ஒன்றியங்கள்
4. அனைத்து தலைமையாசிரியர்கள் ( அரசு உயர்நிலை / மேல்நிலை பள்ளிகள் )